# தமிழிலக்கிய வளர்ச்சிக்கு வலைப்பூக்களின் பங்களிப்பு

**ஜா. ஸ்டெல்லா மேரி**
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழாய்வுத்துறை, தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி

**முன்னுரை**

21-ஆம் நூற்றாண்டின் இணையற்ற வளர்ச்சி இணையம் ஆகும். இணையம் என்பது சர்வ வல்லமை படைத்த ஒரு கண்டுபிடிப்பாக உள்ளது. இந்த நாட்டையே தனது உள்ளங்கையில் கொண்டு செல்லும் பூமி பந்துபோல் சுழன்று வருகிறது. இணையத்துடன் இன்று அனைத்துத் துறைகளும் இணைக்கப்பட்டுள்ளன. குறிப்பாகத் தமிழாய்வுத் துறை. தமிழ் மொழியினைக் கணினிவாயிலாக, இணையவழி சேவை மையங்களுடன் இணைந்து பயன்படுத்தியும், பாதுகாத்தும் வருகின்றனர். இதற்கு தமிழிலக்கிய வலைப்பூக்கள் என்பது முத்தாய்ப்பாய் விளங்குகின்றன. இணையத்தில் உள்ள சேவைகளில் வலைப்பூக்களும் ஒன்று. தமிழிலக்கியங்கள் வலைப்பூக்கள் வாயிலாக எவ்வாறு வளர்ச்சியடைந்து வருகின்றது என்பது குறித்து இக்கட்டுரை வாயிலாக அறியலாம்.

**வலைப்பூ விளக்கம்**

வலைப்பூ என்பது எழுத்துக்கள், ஒலி, ஒளி வடிவக்கோப்புகள், ஓவியம், படங்கள், கட்டுரைகள், கவிதைகள் என்பவற்றை நாமே இணையம் வழி வெளியுலகிற்குத் தெரிவிக்கும் இணைய சேவையாகும்.தமிழில் **வலைப்பூ** என்றும், ஆங்கிலத்தில் **பிளாக் (அ) வெப்பிளாக் webblog** என்றும் இது அழைக்கப்படுகின்றது.

**வலைப்பூ தோற்றம்**

வலைப்பூவை முதலில் கண்டுப்பிடித்தவர்கள் அமெரிக்கர்கள். **webblog** என்ற பெயரை 17.12.1997ம் ஆண்டு **ஜான்பர்கர்** என்பரால் உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. பின்னர் **பீட்டர் மெக்ரோஸ்** என்பரால் 1999ம் ஆண்டு **blog** என்ற குறுக்க வடிவமான சொல்லை பயன்படுத்தப்பட்டுவந்துள்ளது.


**வலைப்பதிவு வரலாறு**

1996ஆம் ஆண்டு முதன் முதலில் வலைத்தள வலைப்பதிவுச் சேவையை ஓயலெய என்ற நிறுவனம் வழங்கியுள்ளது. **1997இல் 100 நாட்குறிப்பேடுகள் அங்கே வைக்கப்பட்டுள்ளது. டிசம்பர் 2005இல் அவற்றின் எண்ணிக்கை ஐம்பதாயிரத்தைக் கடந்து வந்திருக்கிறது.** ஏறத்தாழ இதே காலக்கட்டத்தில் தான் **blogger.com** என்ற சேவை மையமும் தொடங்கியுள்ளது. இவை 2003ல் கூகுள் நிறுவனத்தின் வாயிலாகச் செயல்பாட்டுக்கு வந்துள்ளது.

**இணையத்தில் வலைப்பூக்கள் உருவாக்குதல் முறை**

இணையத்தை பயன்படுத்துபவர்கள் வலைப்பூவை உருவாக்குவது மிகவும் எளிது. இணையத்தில் வலைப்பூ உருவாக்க மின்னஞ்சல் முகவரி என்பது மிகவும் அவசியம். நமது மின்னஞ்சல் முகவரி கூகுள் நிறுவனம், யாகூ நிறுவனம், எம்.எஸ்.என் என்ற நிறுவனங்களில் கணக்கு வைத்திருக்க வேண்டும் www.stanlysham@gmail.com என்பதை போன்று. வலைப்பூக்கள் உருவாக்குவது என்பது இலவசம் தான். www.blogger.com என்ற முகவரிக்கு சென்றால் **New creat blog** என்ற தளம் தோன்றும். அதைச் சொடுக்கி (கிளிக்) செய்து உள்ளே சென்றால் ஒரு புதிய பெயர் ஒன்று உள்ளீடு செய்யச் சொல்லும். அந்த தளத்தில் நாம் கொடுக்கும் பெயர் ஏற்கனவே பதியப்பட்டிருந்தால் முகவரி என்ற தளத்தில் tha address invalied>create

new name என்று கூறும். எனவே ஒரு புதிய பெயர் உள்ளீடு செய்தால் அதுவே நமது வலைப்பூவின் தலைப்பாக அமையும். பிறகு created என்ற இடத்தில் சொடுக்கினால் Templet என்ற முகப்புப் படம் தேர்வு ஆகும்.




நமக்கு தேவையான முகப்பு படத்தைத் தேர்வு செய்து கொடுக்க வேண்டும். நமது வலைப்பூ உருவாக்கப்பட்டது என்று தகவல் வரும். குறிப்பாக **இலக்கியம்.பிளாக்** என்று கொடுத்திருந்தால் அவை திரையில் வெளிவரும். இவ்வாறு ஒரு வலைப்பூவை உருவாக்கமுடியும் என்று இணையத்தில் தமிழ் வலைப்பூக்கள் என்ற இந்நூல் வாயிலாக (நூலாசிரியர்) துரைமணிகண்டன் என்பவர் விரிவான விளக்கங்கள் கொடுத்துள்ளார்.

**வலைப்பூவின் செயல்பாடுகள்**

வலைப்பூ என்பது இங்கு ஒரு பாதுகாக்கப்பட்ட ஒரு நாட்குறிப்பைப் போல் செயல்படும் இவற்றில் எழுதலாம், நமக்கு பிடித்த படங்களை உள்ளீடு செய்யலாம். கவிதைகள், கட்டுரைகள், காணொளிக் காட்சிகள், விளம்பரங்கள் என்று நமக்குத் தேவையான அனைத்தையும் இவற்றில் கொடுத்துவைத்துக்கொள்ளலாம். இணையத்தில் பதிவேற்றம் செய்துவைத்தது ஒரு சில இடையூறுகளால் தடைப்பட்டால் கூட இவற்றில் நாம் கொடுக்கும் தகவல்கள் உடனுக்குடன் திரையில் வெளிவரும். இவையே வலைப்பூக்களின் செயல்பாடாக உள்ளது.

நமது வலைப்பூவில் இருந்துகொண்டே ஒரு நபரிடமிருந்து மற்றொரு நபருக்கு தொடர்பு கொள்ளும் வசதிகள் உள்ளன. நமது வலைப்பூவில் இருந்து கொண்டே நமது மின்னஞ்சல்களை தொடர்பு கொள்ள முடியும். நமது வலைப்பூவில் உள்ள தகவல்களை மற்றவர்களுக்கு மின்னஞ்சல் வாயிலாக அனுப்ப வசதிகள் செய்யப்பட்டுள்ளன. நமது தனிப்பட்ட சுதந்திரத்தை இந்த வலைப்பூக்களின் செயல்பாடுகள் வழங்கிவருகிறது.

**இலக்கியம் சார்ந்த வலைப்பூக்கள்**


**“சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்”** என்பது **பாரதியின் அமுத வரிகள்**. ஆனால், இன்று எட்டுத் திக்கும் செல்ல வேண்டியதில்லை **இணையத்திற்குச் சென்றாலே** எல்லாத் திக்குகளும் நம்மை நோக்கி இணையக் கரம் நீட்டும். இலக்கியம் சார்ந்த வலைப்பூக்களில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு வலைப்பூக்களும் தமிழ்நாட்டில் உள்ளவர்களை விடத் தென்கொரியா,

சுவிட்சர்லாந்து, அரேபியா, மலேசியா, சிங்கப்பூர், ஐக்கிய அரபு நாடு, அமெரிக்கா என்ற பல்வேறு நாடுகளில் உள்ள தமிழ் ஆர்வலர்கள் தங்களின் தமிழ் இலக்கியத்தில் உள்ள பற்றுதலின் காரணமாக வலைப்பூ ஒன்றை உருவாக்கி அதில் தனது பதிவுகளை பதிவுசெய்துள்ளனர். மேலும் தனது பதிவுகள் குறித்த விமர்சனங்கள், தனது இடுகைகள் குறித்த பார்வையாளர்களின் பட்டியல்கள் பதிவுசெய்துள்ளதை அறியமுடிகிறது.

தற்போதைக்கு சுமார் 11000 தமிழ் வலைப்பதிவுகள் உள்ளன. 6000 மேற்பட்ட தமிழ் வலைப்பதிவர்கள் உள்ளார்கள். பெரும்பாலான தமிழ் வலைப்பதிவுகள் ப்ளாக்கர் இணைய தளங்களில் செயல்படுகின்றன என்று விக்கிப்பீடியா நமக்குத் தெரிவிக்கிறது. இதை பார்க்கும் போது தமிழ் வலைப்பதிவுகளே அதிகம் என்பதை அறியமுடிகிறது.


**இலக்கிய வலைப்பூக்கள்**


http://morsmal.no/ta/morsmal-tamil/ungdomstrinnet-morsmal-tamil/2865-tamilsk-litteratur-side





**தமிழ் இலக்கியம்** என்ற வலைப்பூ 14 ஆகஸ்ட் 2013 அன்று தொடங்கப்பட்டுள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலான தொடர்ச்சி கொண்டவை. உலகின் சிறந்த இலக்கியங்களில் ஒன்று. வாழ்வின் பல்வேறு கூறுகளைத் தமிழ் இலக்கியங்கள் இயம்புகின்றன. தமிழ் மொழியில் மரபுரீதியாக 96 சிற்றிலக்கிய நூல் வகைகள் உள்ளன. இன்று தமிழ் மொழியில் பல புது இலக்கிய வகைகள் உருவாக்கப்பட்டுத் தமிழ் இலக்கியம் விரிந்து செல்கின்றது. இந்த இணைய தளம் தமிழ் இலக்கியங்களை அனைவரும் எளிதாகக் கண்டறிய, புரிந்துகொள்ள உதவும் நோக்கோடு அமைக்கப்பட்டிருகிறது.

தமிழ் இலக்கிய வலைப்பூ **ஆரம்ப பாடசாலை, மழலை நிலை** என்ற இரு நிலைகளங்களை கையில் கொண்டு ஆரம்ப பாடசாலையில் **தாய்மொழி, கணிதம், விஞ்ஞானம், சமூகம்** என்ற உள்ளீடுகளைக் கொடுத்துள்ளன.


தெனாலி ராமன்.
ஆரம்பப் பாடசாலை
Grunnskole
மழலை நிலை
Barnehage
பெயரை மறந்த ஈ.


புதிய ஆத்திசூடி
ஆரம்பப் பாடசாலை
Grunnskole
மகாகவி பாடல்கள்
மழலை நிலை
Barnehage


மழலை நிலை
Barnehage
அப்பம்
அன்புமிக்கத் தோழன்
Norske språksider

**மழலை நிலை** என்ற பிரிவில் மழலைகளுக்கான பாடல்கள், கதைகள், வாசித்தல் கேட்டல் என்ற காணொலி காட்சி கதைகள் குறித்த பதிவுகள் இடம் பெற்றுள்ளன.அழசளஅயட என்ற வலைப்பூ எந்த வகையில் தாய் மொழிக்கும், தமிழ் இலக்கியங்களுக்கும் பங்களித்து வருகின்றன என்பதை ஒவ்வொரு பிரிவுகளிலும் உள்ள தகவல்கள்களும், படங்களும் நமக்கு தெளிவுப்படுத்துகின்றன.

பெற்றோர்கள் பக்கம் என்ற பிரிவில் பெற்றோர்கள் அறிந்து கொள்ள வேண்டிய தகவல்கள், ஒன்றாம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரையில் உள்ள பெற்றோர்களின் பங்களிப்பும், அறிந்து கொள்ள கூடிய செய்திகளும் இடம் பெற்றுள்ளன. தமிழ் இலக்கியங்கள் குறித்த மாநாடுகள் பற்றிய தகவல்கள் கொடுத்துள்ளனர்.


இந்த தமிழ் இலக்கிய வலைப்பூக்களில் இருந்து தமிழ் இலக்கிய மின்னிதழ்களுக்குள் செல்லும் வசதியும் கொடுத்துள்ளன. இவை www.illakkiyam.com என்ற முகவரி உள்ளீடு செய்யப்பட்டுள்ளது. அவை






**Ilakkiyam** www.illakkaiyam.com என்ற தலைப்பில் தேர்வு செய்தால்***இணையத்தில் தமிழ் இலக்கியம் இளைப்பாறும் இடமிது*** என்பது இதன் குறிக்கோள் ஆகும். இவற்றில் **முகப்பு, இயல், இசை, நாடகம், கவிதை** என்ற உள்ளடக்கங்கள் உள்ளன.

முகப்புப்பக்கத்தில் இணையத்தில் தமிழ் இலக்கியங்கள் இளைப்பாறும் இடம் என்று தமிழ் இலக்கியத்தை ஒட்டிய காணொலிக்காட்சிகள் திரையில் வளம்வந்து கொண்டே இருக்கும்.

இயல் தமிழ் என்ற பிரிவில் இயல் தமிழ் குறித்த **சிறுகதைகள், கட்டுரைகள்** இடம் பெற்றுள்ளன. இசைத் தமிழ் என்ற பிரிவில் **நாட்டுப்புறப்பாடல், குழந்தைப்பாடல், கல்லாங்காப்பாடல், தெம்மாங்குப்பாடல், சிந்துப்பாடல், கோலாட்டப்பாடல், தாலாட்டுப் பாடல், ஒப்பாரிப்பாடல் என்ற பாடல்களைப் பற்றிய** முழுமையான குறிப்புக்கள் உள்ளன. நாடகம் என்ற பிரிவில் தமிழ் இலக்கியங்களுடன் கூடிய திரைப்படவசனங்கள் : உதாரணமாக கட்டபொம்மன் போர் புறப்பாடு குறித்த வசனங்கள், பராசக்தி நீதிமன்ற வசனங்கள், மனோகரா நாடகம், ராமன் சீதை நாடகம் குறித்த தகவல் இலக்கியப்பார்வையில் பதிவு செய்யப்பட்டுள்ளதை அறியலாம்.


முகப்பு
இயல்
இசை
நாடகம்
கவிதை
திகடசக்கரம்
Tamil Dictionary


முகப்பு
இயல்
இசை
நாடகம்
கவிதை
இசைத் தமிழ்
எழுத்தாளர் தமிழர்கள்


முகப்பு
இயல்
இசை
நாடகம்
கவிதை
கட்டபொம்மன் போர் புறப்பாடு
பயனாளர் பகுதி
Tamil Dictionary
கட்டபொம்மன் - ஜாக்சன் துரை வாக்குவாதம்
பராசக்தி – நீதிமன்ற வசனம்

**முக்கிய இலக்கியங்கள்** என்ற தலைப்பில் **சங்க இலக்கியம், ஔவையார் நூல்கள், திருக்குறள், திருக்கோவையார், பாரதியார் பாடல்கள்** இடம் பெற்றுள்ளன.


**பயனாளர் பகுதி** என்ற தலைப்பில் பதிவு செய்க, புகுபதிகை என்ற இரண்டு உள்ளீடுகள் உள்ளன. இவற்றில் நமது பெயர் மற்றும் மின்னஞ்சல் முகவரியைக் கொடுக்க வேண்டும். இவை காப்புரிமை பெற்றது: 2014, 2015 என்று பதிவுசெய்யப் பட்டுள்ளது.


**இயற்றமிழ் என்ற தளத்தில்**

- **சங்க இலக்கியம்**: அகத்தியம், தொல்காப்பியம்
- **பதினெண் மேற்கணக்கு நூல்கள்**
- **எட்டுத்தொகை**: ஐங்குறுநூறு, அகநானூறு, புறநானூறு, கலித்தொகை, குறுந்தொகை, நற்றிணை, பரிபாடல், பதிற்றுப்பத்து,
- **பத்துப்பாட்டு**: திருமுருகாற்றுப்படை, குறிஞ்சிப் பாட்டு, மலைபடுகடாம், மதுரைக் காஞ்சி, முல்லைப் பாட்டு, நெடுநல்வாடை, பட்டினப் பாலை, பெரும்பாணாற்றுப்படை, பொருநர்ஆற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை
- **பதினெண் கீழ்க்கணக்கு**: நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, கார் நாற்பது,களவழி நாற்பது, ஐந்திணை ஐம்பது, திணைமொழி ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமாலை நூற்றைம்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி நானூறு, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி, கைந்நிலை
- **ஐம்பெருங்காப்பியங்கள்**: சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி, சீவக சிந்தாமணி
- **ஐஞ்சிறுகாப்பியங்கள்:** உதயண குமார காவியம், நாககுமார காவியம் யசோதர காவியம், சூளாமணி, நீலகேசி

என்று ஒவ்வோர் இலக்கியத்திற்கும் அதன் தலைப்புக்கு ஏற்ற வண்ண ஓவியப்படங்களுடன் உள்ளன. படிப்பவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையில் இலக்கியப்பதிவுகள் காணக்கிடைக்கின்றன.

**எடுத்துக்காட்டாக**






இந்த வலைப்பூவின் வாயிலாகத் தமிழ் இலக்கிய தகவல்களைத் தொடர்ந்து வளர்ந்து கொண்டு வருவதைக் காணமுடிகின்றன. இலக்கியங்கள் என்பது எத்தனை நூற்றாணடுகளைக் கடந்தாலும் தொடர்ந்து வளம் பெற்றுகொண்டு தான் இருக்கும் என்பதற்கு அடையாளமாக இந்த வலைப்பூக்கள் அமைந்துள்ளன.

### தமிழ் இலக்கியம் குறித்த பிற வலைப்பூக்கள்

**அழியாச் சுடர்கள்** http://azhiyasudargal.blogspot.in ***நவீன இலக்கிய கர்த்தாக்களின் படைப்புப் பெட்டகம்,*** இவை 2009ல் காப்புரிமைப் பெற்றது. அழியாச்சுடர் என்ற இந்த வலைப்பூவில்நவீன இலக்கிய படைப்பாளிகளின் படைப்புகள் பட்டியலில் இடம்பெற்றுள்ளன. 2009இல் இருந்து 2017 வரை வெளிவந்த நவீன படைப்புகள் தளத்தில் உள்ளன.

குறிப்பாக 2013 என்ற ஆண்டை தேர்வு செய்தால் அதில் ஒவ்வொரு மாதமும் வெளியான தலைப்புகள் படைப்பாளர்களின் படைப்புகள் தளத்தில் உள்ளன. இவற்றில் உள்ள படைப்புகளைப் பெற நமது மின்னஞ்சல் முகவரியை இவற்றில் உள்ளீடு செய்யவேண்டும்.

### முகப்புபக்கத்தில் உள்ள படைப்பாளர்களின் பெயர்களின் பட்டியல்

அ. மாதவையா, அ.முத்துலிங்கம்,அ.ராமசாமி, அசோகமித்திரன், அபி, அம்பை, அழகிய பெரியவன், அறிமுகம், ஆ.மாதவன், ஆதவன், ஆத்மாநாம், ஆர்.சூடாமணி, ஆவணப்படம், இந்திரா பார்த்தசாரதி, இமையம்,உமா மகேஸ்வரி, உமா வரதராஜன் உள்ளிட்ட அனைத்துப் படைப்பாளர்களின் பட்டியலும் இங்கு பதிவேற்றம் செய்துள்ளனர். இவற்றில் நமக்கு தேவையார்களின் தகவல் பெற, அப்பெயரை தேர்வுசெய்தால் போதும் அவரின் படைப்புகள் வெளிவரும். இவை ஓர் இலக்கிய ஆவண வலைப்பூ. இவை தி இந்துப் நாளிதழிலில் 9 ஆகஸ்ட் 2015ம் ஆண்டு வெளியானவை.

### சுபவீ வலைப்பூ http://subavee-blog.blogspot.in/

சுபவீ என்று சுருக்கமாய் அழைக்கப்படும் **சுப.வீரபாண்டியன்**, தமிழ்நாட்டில், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள காரைக்குடி என்னும் ஊரில் இராம. சுப்பையா - விசாலாட்சி ஆகியோரின் இளைய மகனாக, 1952ஆம் ஆண்டு பிறந்தவர். சிறு வயது தொடங்கி, திராவிட இயக்கக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டவர். சாதி ஒழிப்பு, ஆதிக்க எதிர்ப்பு, தாய்மொழிப் பற்று, பெண் விடுதலை, பகுத்தறிவு முதலான கருத்துகளைத் தமிழகமெங்கும் பரப்பி வருபவர். பெரியார், அம்பேத்கர் பற்றாளர். ஈழ விடுதலை ஆதரவாளர். கடந்த கால் நூற்றாண்டிற்கும் கூடுதலாகப் பொதுவாழ்வினர். சென்னைக்

கல்லூரியொன்றில் 21 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றிவிட்டுத் தன் 45ஆம் அகவையில் (வயதில்) விருப்ப ஓய்வு பெற்றவர். ஆரியத்தால் வீழ்ந்தோம், திராவிடத்தால் எழுந்தோம், தமிழியத்தால் வெல்வோம் என்னும் வீர தமிழ் முழக்கத்தை முன்வைத்து, 2007ஆம் ஆண்டு, "**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**" என்னும் இயக்கத்தை நிறுவியவர். இன்றுவரை அவ்வமைப்பின் பொதுச்செயலாளர். **கருஞ்சட்டைத் தமிழர்** என்னும் மாதமிருமுறை இதழின் ஆசிரியர். இலக்கிய ஆர்வலர். அரசியல், வரலாறு, இலக்கியம் எனப் பல்வேறு துறைகளில் 18 நூல்களை எழுதியுள்ளார். கடந்த 40 ஆண்டுகளாகத் தமிழகத்தின் தலைநகரில் வாழ்ந்து வருகின்றார். என்று தனது சுயவிபரபட்டியலில் பதிவுசெய்துள்ளார். இவரின் படைப்புகள் கவிதை என்ற தலைப்பில் இடம்பெற்றுள்ளது.

இவற்றின் உள்ளடக்கங்களாக **அரசியல், இலக்கியம், ஒரு நிமிடச்செய்திகள், சமூகம், தொலைக்காட்சி, நடப்பும் எதிர்வினையும், பகிர்வு, புத்தகப்பட்டியல், பொது, வேறு தோட்டத்துப்பூக்கள்** இடம்பெற்றுள்ளன. View my complete profile - இணையப் பக்கத்தை வலம் வந்தவர்கள்: 839,888 என்று பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**பாலமகி பக்கங்கள்http://balaamagi.blogspot.com/2015/09/blog-post_29.html**

தமிழ் இலக்கியம் சார்ந்த வலைப்பூக்களில் பாலமகியின் பங்கு 2014ம் ஆண்டில் இருந்து பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. **இவற்றில் 2014 - இடம்பெற்ற இலக்கியம் சார்ந்த தகவல்கள் 14 தலைப்புக்களில் இடம்பெற்றுள்ளன. 2015இல் - 69, 2016இல் - 29** என்று வலைப்பூவில் இடம்பெற்றுள்ள தகவலைப் பதிவுசெய்துள்ளனர். 2014இல் இருந்து இதுவரை **76,285** பக்கங்கள் இடம் பெற்றுள்ளதாக தகவல் உள்ளது.

29 செப்டம்பர் 2015, செவ்வாய்க்கிழமை வெளிவந்த **ஐந்தமிழானவள் சூடிய வலைப்பூ** என்ற தலைப்பில் **முனைவர்.சி.மகேசுவரி**என்பவர் வலைப்பூ என்பது என்ன, வலைப்பூ உருவாக காரணம் யாது, அதன்பயன், வளர்ச்சி குறித்த தகவல்களைத் தனது கட்டுரையில் முழுமையாக விமர்சித்துள்ளார்.மேலும் தனது இப்படைப்பு **வலைப்பதிவர் திருவிழா – 2015 மற்றும் தமிழ் இணையக் கல்விக்கழகம் நடத்தும் மின்தமிழ் இலக்கியப்போட்டிகள் – 2015**க்காகவே எழுதப்பெற்றது. என்னுடைய சொந்தப்படைப்பு என்றும் இதற்கு முன் வேறெங்கும் வெளியானதல்ல என்றும் முடிவு வெளியாகும்வரை வேறெங்கும் வெளிவராது என்றும் உறுதியளிக்கிறேன் என்று தனது கருத்தையும் வழங்கியுள்ளார். இதிலிருந்து வலைப்பூ என்பது இளம் கட்டுரைப்படைபாளிகளுக்கு எவ்வளவு பயன்படுகின்றது என்பதை அறியமுடிகிறது.

**குவிகம் தமிழ் இலக்கிய வலைவாசல்** https://kuvikam.com/

**குவியம் தமிழ் பத்திரிக்கை, தமிழ் வலைப்பூ, இ.மேகசின், இலக்கிய இதழ்** என்ற பல்வேறு தளங்களில் வெளிவருகிறது. குவியம் இணையத்தில் வலைப்பதிவாக நவம்பர் 2013ஆம் ஆண்டு பதிவேற்றம் 2017 வரை சிறப்பாகத் தங்களின் படைப்புகளை குவித்துவருகிறது. இவற்றில் இதுவரை 24,789 hits உள்ளதாகத் தகவல்கள் உள்ளன. இவற்றில் select categories என்ற தலைப்பில் அட்டைப்படம், கவிதை, கட்டுரை, சிறுகதை, செய்திகள், தலையங்கம், நிகழ்ச்சித் தொகுப்புகள், என்ற உள்ளீகள் உள்ளன. இவற்றைத் தேர்வு செய்து நமக்குத் தேவையான தகவல்களை பார்க்கமுடியும்.

**திருத்தமிழ் வலைப்பூhttp://thirutamil.blogspot.in/2005/05/blog-post.html**

**தமிழ் மொழி, இனம், சமயம், பண்பாடு, வாழ்வியல், வரலாறு தொடர்பான செய்திகள்** இவற்றில் இடம்பெற்றுள்ளன. இந்த வலைப்பூ மலேசியாவில் இருந்து வெளிவருகின்றது. இவற்றிற்கு உரிமையுடையவர் **சுப.நற்குணன்** என்பவர் மே மாதம் 15ஆம் தேதி 2005ல் தோற்றுவித்துள்ளார். இவரின் **வலைப்பூ அறிமுகப்பக்கத்தில், தமிழர் பெருமக்களே ! வணக்கம், வாழ்க! அனைவரும் சூழ்க!!** என்று பதிவுசெய்து. **தமிழ் மொழியின் பெருமையையும், அதில் உள்ள இலக்கியத்தின் தேனைச் சுவைக்கத் தெரியாதவர்களாய் தமிழர்கள் உள்ளனர்.தமிழ் மொழியின் பெருமையை தமிழர்கள் உணர்ந்துவிட்டால் பின்னர் உலகம் அவற்றை மதிக்கும்.** இவை வெகு

விரைவில் வரும் என்று பதிவுசெய்துள்ளார். **திருத்தமிழ் அன்பர்களின் பதிவெண் : 326555 என்று குறிப்பிட்டுள்ளனர். இதன் வழி நமது பதிவுகளைக் கொடுக்கலாம்.**

வலைப்பூவின் உள்ளே திருத்தமிழ் இயல்கள், மலேசியத் தமிழ் இணையம், உலகத்தமிழ் இணையம், மாணவர் வலை மனை, திருத்தமிழ்த் தொண்டு, தமிழ் மின் இதழ்கள், மின் அகராதிகள் குறித்த அனைத்துத் தலைப்புகளின் கீழ் பல்வேறு உள்ளடக்கங் தலைப்புகள் உள்ளதை அறியமுடிகிறது.

**வீடு திரும்பல் வலைப்பூ** http://veeduthirumbal.blogspot.com/, **தளிர், முத்துச்சரம்** http://tamilamudam.blogspot.in/2010/, **கலையகம்** http://kalaiy.blogspot.com **போன்ற பல்வேறு மின்னிதழ்கள் தளத்தில் உள்ளதை அறியமுடிந்தது.** தமிழ் இலக்கியங்கள் என்பது தொடர்ந்து வளர்ந்து கொண்டே வரும் ஒரு துறை ஆகும். இன்று தகவல் தொடர்புகள் எந்த அளவுக்கு வளர்ச்சியடைந்துள்ளது என்பதை உறுதி செய்யும் வகையில் இந்த வலைப்பூக்கள் அமைந்துள்ளன. வலைப்பூக்கள் என்ற சேவையின் வாயிலாகஇலக்கியங்கள் தொடர்ந்து வளம் பெற்றுவருகின்றது. அவை இன்றைய சமுதாயத்திற்கு வழிகாட்டும் வகையில் அமைந்துள்ளது என்பதை இந்த ஆய்வின் வழி உறுதிசெய்யப்படுகின்றது.

**தொகுப்புரை**

- வலைப்பூக்கள் குறித்த விளக்கங்கள், வலைப்பூவின் தோற்றம், வலைப்பூவின் வரலாறு பற்றிய தகவல்கள் சொல்லப்பட்டுள்ளன.
- இணையத்தில் வலைப்பூக்கள் உருவாக்கும் முறை பற்றியும், வலைப்பூக்களின் செயல்பாடுகள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளன.
- தமிழ் இலக்கிய வலைப்பூக்கள், வலைப்பூக்களில் இலக்கியச் சேவைகள், இயல், இசை, நாடகம், கவிதைகள் குறித்த தகவல்கள், இயற்றமிழ் குறித்த கட்டுரைகள் இடம் பெற்றுள்ளதை அறியமுடிகின்றது.
- ஆரம்பக்கல்வியை இன்றைய இளைய சமுதாயத்திற்கு வழங்கும் நோக்கில் அமைக்கப்பட்டhttp://morsmal.no/ta/morsmal-tamil/வலைப்பூவில் மழலையர்-களுக்கான சிறுகதைகள், பாடல்கள், பெற்றோர்களின் பங்களிப்புகள், மாநாடுகள் குறித்த தகவல்கள் ஆராயப்பெற்றுள்ளன.
- தமிழ் இலக்கியம் சார்ந்த பிற இலக்கியங்கள் குறித்த தகவல்கள் ஆய்வுசெய்யபெற்றுள்ளன.

**அடிக்குறிப்பு:**

1. துரை.மணிகண்டன், இணையத்தில் தமிழ் வலைப்பூக்கள், பக்.11
2. www.ta.wikipedia.org
3. www.emadal.blogspot.com
4. www.manidar.blogspot.com
5. www.mvelangovan.blogspot.com
6. http://morsmal.no/ta/morsmal-tamil/
7. http://azhiyasudargal.blogspot.in/
8. http://subavee-blog.blogspot.in/
9. http://balaamagi.blogspot.com/2015/09/blog-post_29.html
10. https://kuvikam.com
11. http://thirutamil.blogspot.in/2005/05/blog-post.html
12. http://veeduthirumbal.blogspot.com/
13. http://kalaiy.blogspot.com/feeds/posts/default?alt=rss
14. http://kollumeduxpress.blogspot.in/2011/
15. https://www.yarl.com/forum3/topic/66164jkpo;tiyg;G